**" கண்ணைக் காப்பது இமை "**
**" மண்ணைக் காப்பது மழை "**

# மதுரை மாநகராட்சி

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2009ம் ஆண்டு ஜீலை திங்கள் 16-ம் நாள் செவ்வாய்கிழமை காலை 10.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

-------------

**திருக்குறள் :** ***" பல்லார் முனியப் பயனில சொல்லுவான்***
***எல்லாரும் எள்ளப் படும் "***

**பொருள் :** கேட்கின்றவர் பலரும் வெறுக்குமாறு பயனற்ற சொற்களை சொல்கின்றவன் எல்லோராலும் இகழ்ந்துரைக்கப்படுவான்.

**ஆ)** **தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## <u>உறுதிமொழி</u>

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும், பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(செய்தி மற்றும் சுற்றுலாத்துறை அரசாணை (நிலை) எண்.245 நாள் 13.11.98)

## <u>1)</u> <u>H 1/ 17526 / 2009</u>

மதுரை மாநகராட்சியில் நலவாழ்வு மையம் எண்4-ல் மருத்துவ அலுவலராக பணியாற்றும் திருமதி.ஸ்ரீதேவியின் கணவர் சென்னையில் வசிப்பதாகவும், அன்னாரை ஒரு வழி பணிமாறுதலில் சென்னை மாநகராட்சிக்கு மாற்றம் செய்ய கோரி H1/39171/09 ஏட்டில் **.01.09–**ம் மாத மாமன்றக்கூட்டத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில் "அன்னாரை பணி மாறுதல் செய்தால் ஏற்படும். காலியிடத்தில் பணிபாதிக்கப்படும் என்பதை கருத்தில் கொண்டு அன்னாரது மனுவை பரிசீலனை செய்யவேண்டியதில்லை " என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அன்னார் தற்போது மீண்டும் 18.06.2009-ல் நானும் எனது குழந்தையும் தனியாக வசிப்பதால் தாங்கள் எனது குடும்பத்தின் மீது கருணை கூர்ந்து என்னை சென்னை மாநகராட்சிக்கு ஒருவழி பணிமாறுதல் செய்ய ஆவண செய்யுமாறு கேட்டு மனுச்செய்துள்ளதின் பேரில் அன்னாரை சென்னை மாநகராட்சிக்கு ஒருவழிப்பணிமாறுதலில் மாற்றம் செய்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .730**

**மதுரை மாநகராட்சியில் பல மருத்துவ அலுவலர் பணியிடங்கள் காலியாக இருப்பதால் இவரையும் ஒரு வழி பணி மாறுதல் செய்வதனால் மாநகராட்சி பணி பாதிக்கும் என்பதை கருத்தில்கொண்டு, இவரை ஒரு வழி பணி மாறுதல் செய்ய வேண்டியதில்லை என மாமன்றம் தீர்மானிக்கிறது.**

## 2) B1 / 16401/ 2009

மத்திய அரசு அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் ஒய்வூதியம் பெறும் ஓய்வூதியர்கட்கு மத்திய அரசு வழங்கியுள்ள 6வது ஊதியக்குழு ஊதிய நிர்ணயம் அமுல்படுத்தப்பட்டுள்ளதை போன்று தமிழ்நாடு அரசு, ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் குடும்ப ஓய்வூதியர்கள் ஆகியோர்க்கும் ஊதிய உயர்வு வழங்க வேண்டும். என்கிற நல்லெண்ணத்தில் தமிழ்நாடு அரசானது 6வது ஊதியக்குழுவின் பரிந்துரையை அமுல்படுத்த பணிபுரியும் ஊழியர்கட்கு நிதித்துறை அரசாணை எண்.234 நாள்: 01.06.09 மற்றும் ஓய்வூதியர்கட்கு நிதித்துறை அரசாணை எண்.235, நாள் :01.06.09. ஆகிய இரு ஆணைகளை வெளியிட்டுள்ளது.

அவ்வரசாணைகளில் திருத்திய ஊதியம் மற்றும் ஓய்வூதியம் விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள பணியாளர்கள் ஊதியம் மற்றும் ஓய்வூதியத்தை 01.01.06 முதல் அமுல்படுத்தியும் 01.01.07 முதல் நிலுவை தொகையை வழங்கப்பட வேண்டுமெனவும் உத்திரவிடப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் அனைத்து ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் பயனடையும் வகையில் ஜீன் 2009–ம் மாத ஊதியம் மற்றும் ஓய்வூதியத்தில் சேர்த்து வழங்க வேண்டுமெனவும் அரசு நிதித்துறை ஆணை எண்.236 மற்றும் 237 நாள் : 01.06.09-ல் வெளியிடப்பட்டுள்ள அரசாணைகளில் உத்திரவிடப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசு நிதித்துறை அரசாணை எண்கள்234,235 நாள் : 01.06.09 மற்றும் அரசாணை எண்கள் 236,237 நாள்: 01.06.2009–ன் படி மாநகராட்சியில் பணிபுரியும் ஊழியர்கள், ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள் ஆகியோர்களுக்கு 6 வது ஊதியக்குழுவின் படி ஊதியம் மற்றும் ஓய்வூதியத்தை 01.01.06 முதல் அமுலபடுத்தியும் 01.01.07 முதல் நிலுவை தொகைகள் வழங்கிடவும் மேலும், புதிய ஊதிய விகிதத்தில் ஜீன்–09 மாதம் முதல் ஊதியம் மற்றும் ஓய்வூதியத்தில் வழங்கிட மாமன்றத்தின் தகவலுக்கும் பார்வைக்கும் வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : இதன் மூலம் மாநகராட்சி பணியாளர்களுக்கு ரூ1.60 கோடியும், ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.0.90 கோடியும் மாதம் ஒன்றுக்கு கூடுதலாக செலவாகும்.

**மாமன்ற தீர்மானம் எண் .731**

**பதிவு செய்யப்பட்டது.**

## 3) JnS1/04440/2009

மதுரை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றது. அவற்றின் தரத்தினை இலாக்கா மூலம் இதனை தனியார் மூலம் (Third Party Consultancy) மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசு சோதனைக்கூடம், பொறியியல் கல்லூரிகளில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு கண்காணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு சிப்பம் 1 முதல் ஆறு முடிய தற்சமயம் நடைபெற்று வருகிறது. இதனை மூன்றாம் நபர் மூலம் சோதனை செய்யவும் அதற்காகும் செலவுத் தொகையினை JnNURM – நிதியிலிருந்து வழங்கவும் அனுமதி கோரப்படுகிறது.

மேலும் மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்ட பாரளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, மற்றும் மாநில நிதிக்குழு வேலைகளை ஒப்பந்தப்புள்ளி பெற்று குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய M/S.Cos Counsultancy Services நிறுவனத்தாருக்கு பணி ஆணை வழங்கப்பட்டு தரம் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

பாரளுமன்ற தேர்தல் நடவடிக்கையின் காரணமாக JnNURM திட்டப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத காரணத்தினால் மாநகராட்சியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட M/S.Cos Counsultancy Services நிறுவனத்தினரால் வழங்கப்பட்டுள்ள விலைவிகிதத்தில் JnNURM திட்டப்பணிகளுக்கான தரப்பரிசோதனை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டப்பணிகளை தர ஆய்வு செய்ய மறு ஒப்பந்தப்புள்ளி கோரி இறுதி செய்து பணி உத்தரவு வழங்கும் வரை முன் M/S.Cos Counsultancy Services நிறுவனத்தினர் ஏற்கனவே அளித்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகித அடிப்படையில் JnNURM திட்டப்பணிகளை தரப்பரிசோதனை செய்து கொள்ள மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி வழங்கியதை அங்கீகரிக்கவும், தொடர்ந்து தரப்பரிசோதனை செய்யவும் அதற்கான செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .732**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 4) ம.பொ.4 /38954/ 06

மதுரை மாநகராட்சிக்குச் சொந்தமான கீழ்கண்ட இடங்களில் உள்ள சேதமடைந்த கழிப்பறைகளை இடித்து அப்புறப்படுத்தி புதிதாக நவீன சுகாதார வசதிகளுடன் கூடிய கழிப்பறை கட்டிடங்களை கட்டி இயக்கி மீண்டும் மாநகராட்சியிடம் திரும்ப ஒப்படைத்தல்.
(DBOOT SCHEME) முறையின் கீழ் கழிப்பறைகளை நவீனபடுத்துவதற்கு தனியார் நிறுவனங்களிடம் விருப்பம் கோர வேண்டியுள்ளது.
கழிப்பிடங்கள் அமைந்துள்ள விபரம் :-

1. பெரியார் பேருந்து நிலையம் (தென்பகுதி)
2. ஆர்.எம்.எஸ், சாலை
3. ஆரப்பாளையம் பேருந்து நிலையம் உட்புறம்
4. தெற்கு சித்திரை வீதி கோபுரம் எதிரில்
5. தெற்கு சித்திரை வீதி – காவல் ஆணையர் அலுவலகம் அருகில்
6. விளக்குத்தூண் சந்திப்பு
7. முனிச்சாலை சந்திப்பு
8. அண்ணா பேருந்து நிலையம் உட்புறம்
9. பனகல் சாலை புதிய அரசு மருத்துவமனை - கட்டிடம் எதிரில்
10. நேதாஜீ சாலை - ஜான்சிராணி பூங்கா அருகில்
11. மேலமாசி வீதி – கட்டி செட்டி மண்டபம்
12. தேவி நகர் - தெப்பக்குளம் தெற்கு சாலை சந்திப்பு
13. கோ.பூதூர் - பேருந்து அருகில்

மேற்கண்ட கழிப்பறைகளை இடித்து அகற்றுவதற்கும் தனியார் நிறுவனங்களின் மூலம் மாநகராட்சி தெரிவிக்கும் விபரக்குறிப்புகளின் அடிப்படையில் புதிய கழிப்பறைகளை DBOOT முறையில் கட்டுவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .733**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது. மேலும் விடுபட்டுள்ள கீழ்கண்ட இடங்களில் உள்ள கழிப்பறைகளையும் இந்த திட்டத்தில் சேர்க்கவும் மாமன்றம் தீர்மானிக்கிறது.**

1. **வார்டு 37, மீனாட்சி பார்க், மீனாட்சி அம்மன் கோவில் அருகில்**
2. **வார்டு 8, அண்ணாநகர் (பழைய காவல்நிலையம் அருகில்)**
3. **வார்டு 8, அண்ணாநகர் (உழவர் சந்தை அருகில்)**
4. **வார்டு 10 வைகை வடகரை சாலை**
5. **வார்டு 10 இராமராயர் மண்டப சாலை**
6. **வார்டு 13, பீபீ.குளம் – பி.டி.ராஜன் சாலை சந்திப்பு**
7. **வார்டு 13, பி.டி.ராஜன் சாலை – வாழவந்தான் சாலை சந்திப்பு**
8. **வார்டு 25, ஆரப்பாளையம் (மேல்நிலைத் தொட்டி அருகில்)**
9. **வார்டு 45, கீழவெளிவீதி (தவிட்டுச்சந்தை டிவிசன் அருகில்)**
10. **வார்டு 46, பேலஸ் ரோடு (விளக்குத்தூண்)**
11. **வார்டு 48, யானைக்கல் (S.I. அலுவலகம் அருகில்)**
12. **வார்டு 51, காமராஜர் சாலை (சௌராஸ்ட்ரா பள்ளி அருகில்)**
13. **வார்டு 52, தெப்பக்குளம் (ராமநாதபுரம் சாலை அருகில்)**
14. **வார்டு 64, கோவலன் நகர் சந்திப்பு**
15. **வார்டு 68, பழங்காநத்தம் மெயின் சாலை**
16. **வார்டு 58, பாலரெங்காபுரம் மருத்துவமனை அருகில்**
17. **வார்டு 48, மஹால் அருகில்**

## 5) ம.வ.5 /23722/ 2008

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் எல்லா தொலைபேசி / கைப்பேசி நிறுவனத்தினரும் தனியார் இடங்கள் மற்றும் கட்டிடங்களில் தொலை தொடர்பு டவர் அமைத்து பயன்பாட்டில் வைத்துள்ளனர். அவ்வாறு அமைக்கப்பட்ட தொலைபேசி / கைபேசி தொலைதொடர்பு டவர்கள் மாநகராட்சியின் எவ்வித அனுமதியின்றி செயல்பட்டு வருகிறது. அதனை முறைபடுத்துவதற்காக மதுரை மாநகராட்சி பகுதிகளில் அமைக்கப்பட்ட தொலைபேசி / கைபேசி தொலைதொடர்பு கோபுரங்களுக்கு (Telephone Tower) உரிய கட்டணம் / வரி நிர்ணயம் செய்து மாநகராட்சி மூலம் வசூல் செய்ய ஆறு மாதக்காலத்திற்கு ரூ.10,000 என கட்டணம் / வரி நிர்ணயம் செய்வதற்கு மாமன்றத்தின் முடிவினை கோரும் ஆணையாரின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் .734</u>

(6)**ஆறு மாதங்களுக்கு ரூ 20,000/- என வரி நிர்ணயம் செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது,**

## 6) ம.பொ.3 /Est. 1795/ 08-09

மதுரை மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண்.13-க்குட்பட்ட F.F. சாலை முதல் கோகலே சாலை வரையுள்ள பகுதியில் இரண்டாம் வைகை குடிநீர் திட்ட பணிக்காக பிரதான வினியோக குழாய் பதிக்க சாலை தோண்டப்பட்டதால் பழுதடைந்தது. எனவே, மேற்கண்ட சாலையை சீரமைக்க ரூ.62.50 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு டெண்டர் கோரப்பட்டது. வரபெற்ற டெண்டர்களில் குறைந்த விலைப்புள்ளி சமர்ப்பித்த ஒப்பந்தகாரர் திரு.கே.ராதா அவர்களுக்கு வணக்த்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கு மாமன்றத்தின் பின்னற்பை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் .735</u>
<u>பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>

## 7) ம.தி.1 /3745/ 09

மதுரை மாநகராட்சி வார்டு எண் 65, புல எண் 421/2 மற்றும் 423/1 மாடக்குளம் கிராமத்தில் கட்டுப்பட்ட மனை எண் 7ன் உரிமையாளர் திரு.சீத்தாராமன் என்பவர் தனது காலிமனையில் பாதாள சாக்கடை லைன் பதிக்கப்பட்டு உள்ளதால் அதை ஆட்சேபணை செய்துள்ளார். இடம் பார்வையிடப்பட்டு ஆய்வு செய்யப்பட்டதில் பாதாள சாக்கடை பைப் லைன் பதிக்கப்பட்டுள்ள காலியிடம் திரு.சீத்தாராமன் என்பவருக்கு சொந்தமானது தான் என பத்திர ஆவணங்களின்படி தெரிய வருகிறது. மேலும் மேற்கண்ட மனையினஅடியில் குறுக்கே பாதாள சாக்கடை லைன் மனுதாரரின் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ளது. இதனால் மனையை மனுதாரர் பயன்படுத்த இயலாத நிலை உள்ளது. மேற்படி மனையில் பதிக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை லைனை அகற்றி மாற்றுப்பாதையில் பதிப்பதற்கு வழி ஏதும் இல்லாத நிலையும் உள்ளது. இந்நிலையில் திரு.சீத்தாராமன் என்பவர் தனக்கு சொந்தமான மனையில் பாதாள சாக்கடை லைன் பதிக்கப்பட்டுள்ளதை ஆட்சேபணை செய்துள்ளதால் மேற்கண்ட மனையினை மாநகராட்சிக்கு இனாம் சாசனம் மூலம் மாநகராட்சிக்கு பெற்றுக் கொண்டு நகராட்சி நிர்வாக இயக்குநரின் ஒப்புதலைப் பெற்று அதற்கு பதில் சர்வே வார்டு 5A, சர்வே எண் 117-ல் கட்டுப்பட்ட மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தில் மனுதாரரின் மனையின் பரப்பளவிற்கு சமமான 1673 ச.அடி நிலத்தினை மாற்றிடமாக வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் .736</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>

## 8) ம.தி.1 /32475/ 08

மதுரை சத்தியசாயி நகர் கதவிலக்கம் எண் 9-ல் குடியிருந்து வரும் சுப்பிரமணி செட்டியார் மகன் சீனிவாசன் என்பவர், மாடக்குளம் கிராமம் பழைய ரீ சர்வே எண் 104/2ல் 20செண்ட் நிலத்தை கிரையப்பத்திர எண் 2400, நாள்:12.04.1962ன்படி கிரையம் பெற்று தனது பெயரில் பட்டா மாறுதல் செய்து அனுபோகம் செய்து வந்துள்ளதாகவும், தற்போதைய புதிய நகர நில அளவை பணிக்குப் பின்னர் டவுண் சர்வே வார்டு XXI, பிளாக் எண் 22, நகர புல எண் 133ல் 0.0.407.0ச.மீ (சுமார் 10செண்ட் மட்டும்) தனது பெயரில் தாக்காலகியுள்ளதாகவும் எஞ்சிய 10 செண்ட் தற்போதைய நகர புல எண் 132ல் கட்டப்பட்டு கணக்குகளில் "தெரு" ஆணையாளர் மதுரை மாநகராட்சி என்று தாக்கலாகியிருப்பதை மாற்றி மனுதாரின் கோரிக்கையை ஏற்று அவருக்குரிய பரப்பை மேலே சொன்ன ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரரின் பெயரில் பட்டா தாக்கல் செய்ய இருப்பதால் மதுரை மாநகராட்சிக்கு ஆட்சேபணை ஏதும் இருந்தால் உரிய ஆவணங்களுடன் தெரிவிக்குமாறு கோரிய மதுரை தெற்கு வட்டாட்சியர் கடிதம் ந.க.எண்2681/08/அ3. நாள்:06.09.08 வாசிக்கப்பட்டு

மனுதாரரின் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன இடம் பார்வை செய்யப்பட்டது. மனுதாரின் இடம் அங்கீகரிக்கப்பட்ட தென்மேற்கு விஸ்தரிப்பு பாகம் VII நகரமைப்பு திட்டம் பகுதியில் உள்ளது. புதிய நகர புல எண் 132, கணக்குகளில் "தெரு" ஆணையாளர் மதுரை மாநகராட்சி என்று தாக்கலாகியிருந்தாலும் பூமியில் தெரு தொடராமல் மனுதாரரால் முள்வேலி அமைக்கப்பட்டு அவரது கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ளது. மனுதாரின் கிரையப்பத்திரம் இவரது இடத்தை ஒட்டி மேல்புறம் கிரையம் பெற்றுள்ள திருமதி.மீனாட்சியம்மாள் என்பவரின் கிரையப்பத்திரம் மற்றும் இம்மாநகராட்சியால் மனுதாரருக்கு ஒப்புதல் செய்து வழங்கப்பட்ட கட்டிட வரைபடம் ஆகியவை பரிசீலனை செய்யப்பட்டன. இந்த ஆவணங்களில் மனுதாரின் நிலம் தெருவிற்காக ஒதுக்கப்பட்டதற்கான அல்லது மாநகராட்சியால் கையகப்படுத்தப்பட்டதற்கான ஆதாரம் எதுவும் இல்லை. பூமியிலும் தற்போது மனுதாரரின் இடம் நான்கு பக்கமும் முள்வேலி அமைத்து அவரது பராமரிப்பில் உள்ளது. ஏற்கனவே அவரது பத்திரத்தில் கண்டுள்ளபடி ரீசர்வே எண் 104/2Bல் பட்டா எண் 1126-ன்படி அவரது பெயரில் பட்டா தாக்கலாகியுள்ளது.

மனுதாரரின் கோரிக்கை அவரது கிரையப்பத்திரம் அவரிடமுள்ள பழைய பட்டா மதுரை மாநகராட்சியின் அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடம். மதுரை மாநகராட்சியின் அந்தப் பகுதிக்கான லே–அவுட் பிளான். இவரது நிலத்திற்கு மேற்கே உள்ள திருமதி. மீனாட்சியம்மாள் என்பவரின் பத்திரத்தில் கண்டுள்ள நான்குமால் ஆகியவற்றின் அடிப்படையிலும் பூமியில் தெரு இல்லாமல் மனுதாரரின் கட்டுப்பாட்டில் முள்வேலியால் தடுக்கப்பட்டு அவரது பராமரிப்பில் இருப்பதிலிருந்தும், மிகவும் ஏற்கக்கூடியதாக உள்ளது.

மதுரை மாநகராட்சி தற்போதைய நகர நில அளவை டவுன் சர்வே வார்டு XXI பிளாக் எண் 22, நகர புல எண் 132-ல் "தெரு" ஆணையாளர் மதுரை மாநகராட்சி என்று தாக்கலாகியிருப்பதை மாற்றி மனுதாரின் கோரிக்கையை ஏற்று அவருக்குரிய பரப்பை மேலே சொன்ன ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரரின் பெயரில் பட்டா தாக்கல் செய்ய போதிய காரணங்கள் உள்ளன. திட்ட வரைபடத்திலும் இடத்திலும் மனுதாரரின் மனையில் எந்த சாலையும் நிலையில் இல்லை.

எனவே மனுதாரின் கோரிக்கையை ஏற்று மனுதாரின் பெயரில் பட்டா தாக்கல் செய்யவும் சர்வே ஆவணங்களில் உரிய திருத்தம் மேற்கொள்ளவும் மாநகராட்சிக்கு ஆட்சேபணை இல்லை என தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு

**மாமன்ற தீர்மானம் எண் .737**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 9) JNS2/32922/09

மதுரை மாநகராட்சி, ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் சுமார் ரூ.926/- கோடிக்கு பணிகள் நடைபெற்றறு வருகின்றது. ஜவஹர்லால் நேரு புனரமைப்பு திட்டத்தின் கீழ் புது டெல்லி, மற்றும் சண்டிகர் ஆகிய நகரங்களில் நடைபெறும் திட்டப் பணிகளை பார்வையிட்ட, அதன்படி மதுரை மாநகராட்சியில் செயல்படுத்த வணக்கத்திற்குரிய மேயர் தலைமையில் மரியாதைக்குரிய துணைமேயர், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகியோர்கள் சென்று வரவும், அதற்கான செலவு தொகையை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்து பின் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி திட்ட நிதியிலிருந்து மீளப்பெறக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .738**

**கல்கத்தாவில் மாநகராட்சி செயல்பாடுகள் பற்றி தெரிந்து கொள்ளவும், வாரணாசியில் பாரம்பரியமிக்க புராதான செயல்பாடுகள் பற்றி அறிந்து கொள்ளவும், ஜாம்ஷெட்பூரில் 24 மணி நேர குடிநீர் வினியோகத்திட்டம் செயல்பாடுகள் பற்றி அறிந்து மதுரை மாநகராட்சி பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக மேயர், துணைமேயர், மண்டலத்தலைவர்கள் உள்ளிட்ட அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் இந்த இடங்களுக்கு சென்று குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2008**ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் **30-ம்** நாள் **புதன்கிழமை** காலை **12.30** மணிக்கு

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

**1) JNS2/32922/2008**

மதுரை மாநகராட்சி ஜஹவர்லால் நேரு தேசிய நகர்ப்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதிகள் திட்டத்தின் கீழ் 22668 எண்ணிக்கையில் குடியிருப்பு கட்டும் பணி முதல் மூன்று கட்டங்களாக ரூ.307.17 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணிகளை ஆய்வு செய்து அறிக்கையினை மத்திய மாநில அரசுக்கு அனுப்பவும் மத்திய அரசின் நகர்புற வீட்டு வசதி மற்றும் வறுமை ஒழிப்புத்துறையின் ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்புக்குழுவின் 28.07.2008-ந் தேதிய 38-வது கூட்ட நடவடிக்கையில் கீழ்காணும் பணியிடங்களை தோற்றுவிக்க அனுமதியளித்துள்ளது. இப்பணியிடங்களில் பணியமர்த்தப்படும் தகுதியான நபர்களுக்கு கீழ்குறிப்பிட்டவாறு மத்திய அரசின் நிதியிலிருந்து தொகுப்பூதியத்தினை மூன்று ஆண்டுகளுக்கு மிகாமல் முபமையாக வழங்க குழு ஒப்புதல் வழங்கியது.

| **வ. எண்.** | **பதவியின் பெயர்** | **எண்ணிக்கை** | **மாதாந்திர தொகுப்பூதியம் ரூபாயில்** |
|---|---|---|---|
| 1 | திட்ட ஒருங்கிணைப்பாளர் (Project co-ordinator – Housing and Slum development officer) | 1 | 30,000 |
| 2 | சமூக நல மேம்பாட்டு அலுவலர் (Social development officer) | 1 | 25,000 |
| 3 | வாழ்வாதார மேம்பாட்டு நிபுணர் (Livelyhood developmet specialist) | 1 | 25,000 |
| 4 | ஆராய்ச்சி அலுவலர் (Research officer) | 1 | 20,000 |
| 5 | ஆராய்ச்சி மற்றும் பயிற்சி ஒருங்கிணைப்பாளர் (Research & training co-ordinator) | 1 | 20,000 |

மேற்கண்ட ஐந்து (5) பணியிடங்களை தோற்றுவித்து நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களால் அனுப்பப்பட்ட ந.க.எண்.24545/08/IHSDP-I, நாள் :08.07.2009 கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

மத்திய நகர்புற வீட்டுவசதி மற்றும் வறுமை ஒழிப்புத்துறையின் ஒப்புதல் வழங்கும் & கண்காணிப்புக்குழு அனுமதி அளித்துள்ள திட்ட செயலாக்க குழுவில் (Project implementation unit) மதுரை மாநகராட்சிக்கான ஐந்து (5) அலுவலர்களை தொகுப்பூதியத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மிகாமல் பணியமர்த்தி உத்தரவிட்ட நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களின் கடிதத்தினை மாமன்றம் பதிவு செய்ய ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .739**
**பதிவு செய்யப்பட்டது.**

## 2) மநி.1 /18107/ 2006

ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின்கீழ் மதுரை மாநகராட்சிக்கு முதற்கட்டமாக கீழ்கண்ட திட்டங்களுக்கு அனுமதி வழங்கி பணிகள் நடைபெற்று வருகிறது.

| வ.எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ கோடியில்) |
|---|---|---|
| 1 | இரண்டாம் வைகை குடிநீர் திட்டம் | 59.316 |
| 2 | திடக்கழிவு மேலாண்மை திட்டம் | 74.29 |
| 3 | தடுப்பணை கட்டுதல் | 9.15 |
| 4 | மழைநீர் வடிகால் அமைத்தல் | 251.81 |
| 5 | விடுபட்ட பகுதிகளுக்கு பாதாளச்சாக்கடை அமைக்கும் திட்டம் | 229.34 |
| 6 | குடிசை அபிவிருத்தி மற்றும் வீடு கட்டும் திட்டம் | 307.17 |
| மொத்தம் | | 926.69 |

மேற்படி திட்டங்கள் நிறைவேற்ற மத்திய அரசின் அனுமதியினை எதிர்நோக்கி தமிழக அரசு ஆணை எண்.2 (டி) 105 எம்.ஏ.டபுள்யூ.எஸ். நாள் 26.06.07ல் 52 பணியிடங்கள் தோற்றுவித்து பணி மேற்கொள்ள ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதில் கீழ்க்கண்டவாறு பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டு தற்சமயம் பணிகள் நடைபெற்று வருகிறது. இவற்றில் இரண்டாம் வைகை குடிநீர் திட்டம் முடிவுற்றும், திடக்கழிவு மேலாண்மை திட்டம் விரைவில் முடிவுறும் நிலையில் உள்ளது.

| வ.எண் | பதவியின் பெயர் | அரசாணை எண் (2டி) 105ன் படி அனுமதிக்கப்பட்ட பணியிடம் | பூர்த்தி செய்யப்பட்ட பணியிடம் | காலி பணியிடம் |
|---|---|---|---|---|
| 1 | கண்காணிப்பு பொறியாளர் | 1 | 1 | - |
| 2 | செயற்பொறியாளர் | 2 | 2 | - |
| 3 | உதவி செயற்பொறியாளர் | 4 | 4 | - |
| 4 | உதவி பொறியாளர் இளநிலை பொறியாளர் | 8 | 8 | - |
| 5 | வரைவு அலுவலர் | 4 | 4 | - |
| 6 | தொழில் நுட்ப உதவியாளர் | 16 | 10 | 6 |
| 7 | கணக்கு அலுவலர் | 1 | 1 | - |
| 8 | கண்காணிப்பாளர் | 2 | 2 | - |
| 9 | உதவியாளர் | 4 | 4 | - |
| 10 | இளநிலை உதவியாளர் | 2 | 2 | - |
| 11 | புள்ளி விபரம் குறிப்பாளர் | 2 | - | 2 |
| 12 | உதவி திட்ட அமைப்பாளர் | 1 | 1 | - |
| 13 | நகர திட்ட அலுவலர் | 1 | 1 | - |
| 14 | மண்டல திட்ட அலுவலர் | 4 | 4 | - |
| மொத்தம் | | 52 | 44 | 8 |

மேற்கண்ட 44 பணியிடங்கள் பூர்த்தி செய்தும் 8 பணியிடங்கள் காலியாகவும் உள்ளது. இப்பணியிடங்கள் அனைத்தும் 26.6.09 ம் தேதியுடன் முடிவடைகிறது. இந்நிலையில் மத்திய அரசின் 29.12.08ம் தேதி 62-வது சி.எஸ்.எம்.சி கூட்டத்தில் மதுரை மாநகராட்சிக்கு கீழ்கண்ட பதவிகளுக்கு

மட்டும் அனுமதி வழங்கி அதற்காக மூன்று ஆண்டு செலவு தொகை ரூ.58.50 லட்சம் மட்டும் (முதலாண்டு 26.50, இரண்டாம் ஆண்டு 19 லட்சம், மூன்றாம் ஆண்டு ரூ.13 லட்சம் ) திட்டத்தில் செலவு செய்துக்கொள்ள வரப்பெற்றுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண் | பதவி | சம்பளம் |
|---|---|---|
| 1 | தகவல் தொழில் நுட்ப அலுவலர்<br>(Information Technology Officer) | 35,000 |
| 2 | மாநகராட்சி கணக்கு அலுவலர்<br>(Municipal Finance Officer) | 30,000 |
| 3 | பொது சுகாதார பொறியாளர்<br>(Public Health Engineer) | 30,000 |
| 4 | சமூகம் மற்றும் சமுதாய திட்ட அலுவலர்<br>(Social and Community Development Officer) | 30,000 |
| 5 | நகர திட்ட அலுவலர்<br>(Urban Planning Officer) | 30,000 |
| 6 | கொள்முதல் அலுவலர்<br>(procurement Officer) | 30,000 |
| 7 | சுற்றுச்சூழல் அலுவலர்<br>(Environment Officer) | 30,000 |
| 8 | மனித வள மேம்பாட்டு அலுவலர்<br>(Human Resource Development) | 30,000 |

மேற்படி எட்டு பணியிடங்கள் அதன் எதிரே குறிப்பிட்ட சம்பள விகிதத்தில் (Consolidate payment) நியமித்து செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் திட்டத்தினை செயல்படுத்த தனியாக பொறியாளர்கள் ஏதும் அனுமதிக்கவில்லை. மேற்கண்ட திட்டங்கள் அனைத்தும் தற்பொழுது முன்னேற்ற நிலையில் நடைபெற்று வருவதால் பொறியாளர்கள் இல்லாமல் திட்டங்களை துரிதமாகவும் தரமாகவும் செயல்படுத்த இயலாது. தற்பொழுது மேலே அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் அரசு ஆணை எண்.2(டி) 105ல் அனுமதிக்கப்பட்ட 52 பணியிடங்களில் பணிபுரிந்து வரும் அலுவலர்களில் அவர்கள் கல்வித்தகுதிக்கு தகுந்தவாறு கீழ்கண்டவாறு பூர்த்தி செய்யலாம்.

| வ.எண் | அனுமதிக்கப்பட்ட பணியிடம் | கல்வித்தகுதி | தற்போது பணிபுரியும் அலுவலர்கள் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | தகவல் தொழில் நுட்ப அலுவலர்<br>(Information Technology Officer) | பி.இ., | எஸ்.லோகேஷ்பிரபு<br>உதவி பொறியாளர் | மேற்படி பணியாளர்களை ஏற்கனவே பெற்று வரும் சம்பள விகிதத்தில் இந்த பணியிடங்களை பூர்த்தி செய்யவும் அனுமதிக்கப்பட்ட தொகை போக கூடுதல் செலவினத்திற்கு மாநகராட்சி பொது நிதியிலிருந்து ஏற்கலாம். |
| 2 | மாநகராட்சி கணக்கு அலுவலர்<br>(Municipal Finance Officer) | பி.காம்., | எஸ்.முத்துக்குமார்<br>கணக்கு அலுவலர் | |
| 3 | பொது சுகாதார பொறியாளர்<br>(Public Health Engineer) | எம்.இ., | எஸ்.எம்.ராஜேந்திரன்<br>உதவி செயற்பொறியாளர் | |
| 4 | சமூகம் மற்றும் சமுதாய திட்ட அலுவலர்<br>(Social and Community Development Officer ) | எம்.ஏ.,எம்.பில்.,<br>எம்.ஏ., | வி.ராஜேந்திரன்<br>திட்ட அலுவலர் | |
| 5 | நகர திட்டஅலுவலர்<br>(Urban Planning Officer) | பி.இ.,<br>எம்.பி.ஏ.,<br>பி.எல்.,<br>பி.உறச்.டி., | ஏ.டி.நரசிம்மன்,<br>உதவி செயற்பொறியாளர் | |
| 6 | கொள்முதல் திட்ட அலுவலர்<br>(procurement Officer) | பி.இ.,<br>எம்.பி.ஏ., | எஸ்.அரசு,<br>உதவி செயற்பொறியாளர் | |
| 7 | சுற்றுச்சூழல் அலுவலர்<br>(Environment Officer) | எம்.இ., | ஏ.மதுரம்<br>செயற்பொறியாளர் | |
| 8 | மனித வள மேம்பாட்டு அலுவலர்<br>(Human Resource Development) | எம்.இ.,எம்.பி.,ஏ<br>எஃப்.ஐ.இ.,<br>எம்.பி.எல்., | ஆர்.விஜயக்குமார்<br>கண்காணிப்பு பொறியாளர் | |
| | | | | |

மேலும் கீழ்கண்ட திட்டங்களை செயல்படுத்த மத்திய மாநில அரசுகளின் ஒப்புதல் பெறும் நிலையில் தொடர் நடவடிக்கை எடுத்து இத்திட்டங்களையும் அமுல்படுத்தப்பட உள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ கோடியில்) |
|---|---|---|
| 1 | பழமை வாய்ந்த பாரம்பரியமிக்க இடங்களை புதுப்பித்தல் - முதற்கூட்டப் பொருள் | 126.00 |
| 2 | நீர்நிலை மேம்பாட்டுத்திட்டம் | 125.00 |
| 3 | கணினி மயமாக்குதல் | 42.47 |
| 4 | 24 மணி x 7 நாள் தொடர் குடிநீர் வழங்கும் திட்டம் | 32.00 |
| 5 | பேருந்து செல்லும் சாலை மற்றும் முக்கிய சாலை அமைத்தல் | 97 |
| 6 | சாலை மேம்பாட்டுத்திட்டம் - சீப்பம் 9a (பகுதி 1) 1) துரித பேருந்து சாலை அமைத்தல் | 321.43 |
| மொத்தம் | | 743.90 |

எனவே மத்திய மாநில அரசுகளால் அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் 2012ஆம் ஆண்டு தான் முடிவடையும் நிலையில் உள்ளது. மேலும் 2வது ஜவஉறர்லால் தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தில் புதிதாக செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்துவதற்கு பொறியாளர் இருந்தால் தான் இத்திட்டத்தை முழுமையாகவும், தரமுள்ளதாகவும் செயல்படுத்த முடியும். எனவே மாநகராட்சியில் நடைபெறும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஏற்கனவே தோற்றுவிக்கப்பட்டுள்ள பணியிடங்கள் கீழ்கண்ட மாறுதல்களுடன் அனுமதித்து தொடர்ந்து செயல்படுத்த அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பதவியின் பெயர் | பணியின் விபரம் | | | சம்பள விபரம் | | | ஆண்டு மொத்த ஊதியம் (லட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மழைநீர் வடிகால் திட்டம் | பாதாளச் சாக்கடை திட்டம் | திடக்கழிவு மேலாண்மை திட்டம் | ஊதியம் | ஊதிய தர வரிசை | ஊதிய நிலை | |
| 1 | கண்காணிப்பு பொறியாளர் | - | 1 | 1 | 37400-67000 | PB4 | 8700 | 11.06 |
| 2 | செயற்பொறியாளர் | 1 | 1 | 1 | 15600-39100 | PB3 | 6600 | 7.98 |
| 3 | உதவி செயற்பொறியாளர் | 2 | 2 | 1 | 15600-39100 | PB3 | 5400 | 12.60 |
| 4 | உதவி பொறியாளர் இளநிலை பொறியாளர் | 6 | 6 | 4 | 9300-34800 | PB2 | 4700 | 26.88 |
| 5 | தொழில் நுட்ப உதவியாளர் | 4 | 4 | 2 | 5200-20200 | PB1 | 2800 | 7.68 |
| 6 | கண்காணிப்பாளர் | 1 | - | - | 9300-34800 | PB2 | 4300 | 1.63 |
| 7 | உதவியாளர் | 1 | - | 1 | 5200-20200 | PB1 | 2400 | 1.83 |
| 8 | இளநிலை உதவியாளர் | 1 | - | 1 | 5200-20200 | PB1 | 2400 | 1.73 |
| 9 | புள்ளி விபரக்குறிப்பாளர் | - | 1 | 1 | 5200-20200 | PB1 | 2400 | 1.71 |
| 10 | மண்டல திட்ட அலுவலர் | - | - | 1 | 9300-34800 | PB2 | 4700 | 1.68 |
| மொத்தம் | | 16 | 15 | 13 | | | | 74.78 |

மேற்கண்ட பணியிடங்கள் அனைத்தும் அரசு ஆணை எண் 2 (டி) 105 நாள்.26.6.2007 அனுமதிக்கப்பட்ட 52 பணியிடங்களுக்குட்பட்டு இருப்பதாலும் திட்டங்களை மேலும் 2012ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட உள்ளதாலும், மேற்கண்ட பணியிடங்களை தோற்றுவித்து 2012 ஆண்டு வரை செயல்படுத்த அரசு ஆணை பெறவும் புதியதாக அனுமதிக்கப்பட்ட 8 பணியிடங்களில் ஏற்கனவே பணியாற்றும் அலுவலர்களை பூர்த்தி செய்யவும், மத்திய அரசு நிதி ஒதுக்கீடு பெறும் வரை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மேற்கண்ட செலவு தொகை அரசு அங்கீகரிக்கப்பட்ட 49சதவீதத்திற்கு கூடுதலாக இருந்தாலும் திட்டப்பணிகளை நிறைவேற்ற வேண்டியிருப்பதால் அதற்கு விதிவிலக்கு அளித்து அரசுக்கு பிரேரரணை அனுப்ப மாமன்றம் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் .740</u>

**அ) மத்திய அரசின் நகரப்புற வளர்ச்சி துறையின் ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்புக்குழு அனுமதி அளித்துள்ள திட்ட செயலாக்க குழுவில் (Project Implementation Unit) மதுரை மாநகராட்சிக்கென எட்டு பணியிடங்களை மூன்று ஆண்டுகளுக்கு தோற்றுவிக்க அனுமதி அளித்தும், அப்பணியிடங்களுக்கு ஊதியம் வழங்க ஒதுக்கப்பட்டுள்ள ரூ 58.50 லட்சத்தினை மாநகராட்சி பயன்படுத்திக்கொள்ள வரப்பெற்ற நடவடிக்கை விபரத்தினை மாமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

**ஆ) மத்திய அரசின் ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்புக்குழுவால் அனுமதிக்கப்பட்ட எட்டு (8) பணியிடங்களில் தற்போது ஜவஹர்லால் நேரு தேசிய நகரப்புற புனரமைப்பு திட்டத்தில், இம்மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் அதிகாரிகள் மற்றும் மாநகராட்சி அலுவலர்களை கொண்டு பூர்த்தி செய்ய அரசினை கேட்டுக்கொள்ள மாமன்றம் தீர்மானிக்கிறது.**

**இ) ஜவஹர்லால் நேரு தேசிய நகரப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டுவரும் மற்றும் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களுக்கென மத்திய அரசின் ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்பு குழுவால் ஒப்புதல் வழங்கியுள்ளவாறு திட்ட செயலாக்க குழு (Project Implementation Unit) வின் எட்டு (8) அலுவலர்களுடன் கூடுதலாக மாநகராட்சியில் 44 பணியிடங்களுக்கும் தொழில்நுட்ப உதவியாளர் 10 பணியிடங்களுக்கு பதிலாக 9 பணியிடங்களையும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு ஒரு மண்டல திட்ட அலுவலருக்கு பதிலாக 2 மண்டல திட்ட அலுவலர்களை பணியமர்த்த திருத்தம் செய்து கூடுதலாக 44 பணியிடங்களை தோற்றுவித்து திட்டத்தை செயல்படுத்தி கண்காணிக்கவும் தீர்மானிக்கிறது.**

**3) <u>ம.வ.3/19551/ 2009</u>**

மதுரை மாநகராட்சி பகுதிகளுக்குட்பட்ட சுவர்களில் சுவரொட்டி விளம்பரங்கள் செய்து அசுத்தம் செய்யப்பட்டு வருகிறது என்றும் மதுரை மாநகரம் வளர்ந்து வரும் மாநகரமாகும் என்றும் உலகப்புகழ் அருள்மிகு மீனாட்சியம்மன் கோவிலைச்சுற்றி உள்ள பகுதிகளில் எவ்விதம் விளம்பரமின்றி (காவல் தடுப்பு இரும்பு வேலிகளில் இருக்கும் விளம்பரம் உட்பட) முற்றிலும் பாதுகாக்கப்பட்ட பகுதியாகும் என்றும் மதுரை மாநகர் முழுவதும் உள்ள மாநகராட்சி சொத்துக்களான அலுவலக கட்டிடங்கள், மருத்துவமனைகள் குடிநீரேற்று நிலையங்கள், டம்பர் பின்கள், தெருவிளக்கு மின்கம்பங்கள் , பாலங்கள், பள்ளிக்கூடங்கள் போன்ற இடங்களில் சுவரொட்டி மூலம் விளம்பரம் செய்வதை தடை செய்ய வேண்டும் என்றும் உத்திரவை மீறுபவர்கள் மீது சுவரொட்டி தயார் செய்த விளம்பர நிறுவனத்தினர் மீதும் அபாரதத் தொகையாக ரூ.5000/- (அபராதத்தொகை சுத்தம் செய்வதற்காக) நிர்ணயம் செய்யலாம் என்றும் தெரிவித்துள்ள மதுரை மாநகராட்சி துணை மேயர் அவர்களின் 5.6.2009 ம் தேதிய கடிதம் வாசிக்கப்பட்டு மதுரை மாநகரில் உள்ள அருள்மிகு மீனாட்சியம்மன் கோவிலைச் சுற்றியுள்ள நான்கு சித்திரை வீதிகள், நான்கு வெளி வீதிகள், நான்கு மாசி வீதிகள், நான்கு ஆவணி மூல விதிகள், அழகர் கோயில் மெயின்ரோடு, மாநகராட்சி பேருந்து நிலையங்கள், நிழற்கூடைகள், அனைத்து பாலங்கள், காமராஜர் சாலை , தமுக்கம் மைதானம், காந்தி மியூசியம் ரோடு , கே.கே.நகர் 80 அடி ரோடு, அண்ணாநகர் 100 அடி ரோடு, பனகல் சாலை, சாலை சந்திப்புகளில் உள்ள போக்குவரத்து திட்டுகள் மதுரை மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட அலுவலக கட்டிடங்கள் மற்றும் சுற்றுச்சுவர்கள் மருத்துவமனைகள், குடிநீரேற்று நிலையங்கள், டம்பர் பின்கள், தெருவிளக்கு மின்கம்பங்கள், பள்ளிக்கூடங்கள், அரசு கட்டிடங்கள், அரசு சார்ந்த நிறுவனங்களின் கட்டிடங்கள் மற்றும் மாமன்ற குறிப்பிடும் சாலைகள் போன்ற இடங்களின் சுவரொட்டி மூலம் விளம்பரம் செய்வதனை தடை செய்யவும், மாமன்ற தீர்மானத்தை மீறுபவர் மீது சுவரொட்டி விளம்பரம் செய்த விளம்பர நிறுவத்தினர் மீதும், சுவரொட்டி உள்ள விளம்பரத்தாரரின் நிறுவனத்தின் மீதும் மதுரை மாநகராட்சி மூலம் ரூ.5,000/- (அபாராதத் தொகை சுத்தம் செய்வதற்காக மட்டும் வசூல் செய்ய) மாமன்றத்தின் முடிவினைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் .741</u>**

**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது. மேலும் விளம்பரம் செய்ய தடை செய்யப்படும் இடங்களுடன் மேலூர் ரோடு மற்றும் திருப்பரங்குன்றம் ரோடு ஆகியவைகளை சேர்க்கவும் இதனை 1.9.2009 முதல் செயல்படுத்தவும் மாமன்றம் தீர்மானிக்கிறது.**

**4) <u>ம.தி 1/19787/ 09</u>**

மதுரை மாநகராட்சி மேலூர் ரோடு, சர்வே வார்டு எண் 10, பிளாக் எண் 102, பழைய TS.No. 2736 மற்றும் 2737 புதிய TS.No.7 மற்றும் 8 ஆகிய இடங்கள் சர்வே ஆவணங்களில் அரசுக்கு சொந்தமான மயான உபயோகம் மற்றும் திறந்த வெளி என குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விடத்தில் இம்மாநகராட்சியால் மத்திய காய்கறி அங்காடியை தற்காலிகமாக அமைக்க உத்தேசிக்கப்பட்டு மாண்புமிகு மத்திய ரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் அவர்களால் 21.06.09 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. இப்பணி விரைவில் ஆரம்பிக்க இருப்பதால் மாநகராட்சியின் உபயோகத்தில் உள்ள 6.85ஏக்கர் பரப்பளவு கொண்ட நகரளவை எண் 7 கொண்ட நிலத்தையும் 1.38 ஏக்கர் பரப்பளவு கொண்ட நகரளவை எண் 8 நிலத்தையும் ஆக மொத்தம் 8.23 ஏக்கர் நிலத்தை இம்மாநகராட்சிக்கு உரிமை மாற்றம் செய்து தரும்படி மாவட்ட ஆட்சியரை கேட்டுக் கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் .742</u>**

**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 5) மதி 1/18164/ 09

மதுரை மாநகராட்சி எல்கைக்குள் கட்டப்படும் கட்டிடங்களுக்கு மதுரை மாநகராட்சி சட்டம் மற்றும் அதிகாரத்திற்குட்பட்டு கட்டிட வரைபட அனுமதியினை மதுரை மாநகராட்சியினால் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது தலைவர் / மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை உள்ளூர் திட்டக் குழும கடிதம் ந.க.எண்1593/08,மதி3/26.06.09-ல் கடிதத்தில் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 97A-ன்படி உள்ளாட்சிகளுக்கு கீழ்க்கண்டவாறு அதிகார பகிர்பு அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| **குடியிருப்பு கட்டிடங்கள் -** | மொத்த தளப்பரப்பு 200 சதுர மீட்டருக்கு மிகாமல் உள்ள தரைதளம் + முதல் தளம் கொண்ட குடியிருப்பு கட்டிடங்கள் மட்டும் |
| **வணிக கட்டிடங்கள்** | மொத்த தளபரப்பு 100 சதுர மீட்டருக்கு மிகாமல் உள்ள தரைதளம் + முதல் தளம் கொண்ட வணிக கட்டிங்கள் மட்டும். |

மேற்கண்ட பரப்பு அளவுகளுக்கு மேல் உள்ள அனைத்து அபிவிருத்திகட்கும், மதுரை உள்ளூர் திட்டக் குழுமத்திடம் திட்ட / அனுமதியினை பெற்று அதன் பின்னரே உள்ளாட்சிகளால் கட்டிட அனுமதி அளிக்கப்படவேண்டுமெனவும் தெரிவித்துள்ளதால் விரிவு அபிவிருத்தி திட்டப் பகுதி மற்றும் திட்டமில்லா பகுதியில் ஏற்படும் வளர்ச்சிகளுக்கு சென்னை நகர் ஊரமைப்பு ஆணையர் சுற்றறிக்கை ந.க.எண்17114/07/பி.ஏ2/நாள்:28.09.07 மற்றும் 07.01.2008ல் மேற்கண்டுள்ள அதிகார பகிர்வுக்குட்பட்டு மாநகராட்சியால் கட்டிட அனுமதி வழங்கும்படியும் அதற்கு மேல் பரப்பளவு கொண்ட இனங்களுக்கு மதுரை உள்ளூர் திட்டக் குழுமத்திடம் முறையான திட்ட அனுமதி பெற்றபின்னரே மாநகராட்சியால் கட்டிட அனுமதி வழங்கிட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்படி மதுரை உள்ளூர் திட்டக் குழுமம் தலைவர் / மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதம் ந.க.எண்1593/08, மதி3, நாள்:26.06.09-ஐ மாமன்றத்தின் தகவலுக்கும் மற்றும் முடிவுக்கும் வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .743**

**மதுரை மாநகராட்சியில் 1971 மாநகராட்சி சட்டப்பிரிவு 4(3) மற்றும் அரசாணை எண் 1015, நாள் 19.5.1973–ன்படி 1942-வது வருடந்திர திருத்திய கட்டிட விதிகள் பின்பற்றப்படுவதால், பொது கட்டிட விதிகள் மற்றும் பல மாடி கட்டிட விதிகள் இம்மாநகராட்சிக்கு பொருந்தாது. விதிகளை திருப்தி செய்கின்ற அனைத்து கட்டிடங்களுக்கும் இம்மாநகராட்சியே அனுமதி வழங்க ஏற்கனவே நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் அரசாணைகள் முறையே 675, நாள் 04.11.1992 மற்றும் 699 நாள் :09.11.1987 உள்ளது. மாநகராட்சி சட்டப்பிரிவு 275-ன்படி அனுமதி கோரி பெறப்படும் கட்டிட வரைபட விண்ணப்பங்கள் மீது அங்கீகரித்தோ அல்லது மறுத்தோ 30 தினங்களுக்குள் உரிய உத்தரவு வழங்கப்படாதிருந்தால் சட்டப்பிரிவு 277-ன் படி அனுமதி வழங்கப்பட்டதாகிவிடும். இதனால் அனுமதியற்ற கட்டிடங்கள் அதிகரிக்கவும், மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. மதுரை மக்கள் ஒரு அனுமதிக்கு, இரு வேறு அலுவலகங்களை அணுகுவதை தவிர்க்கும் பொருட்டு, மதுரை மக்களின் நலன் கருதி விதிகளை திருப்தி செய்யும் அனைத்து கட்டிட வரைபட விண்ணப்பங்களையும் உள்ளூர் திட்டக்குழுமத்தின் தலைவரால் ந.க.எண்.59/93(1)MP3 நாள்: 30.12.93 உத்தரவை தொடர்ந்து பின்பற்றி மாநகராட்சி ஆணையாளரே அனுமதி வழங்கிட வேணடும் என்று விதிகளை பாதிக்கும் கட்டிட வரைபட விண்ணப்பங்களை மட்டும் உரிய பரிந்துரையுடன் உள்ளூர் திட்டக்குழுமத்திற்கு அனுப்ப வேண்டும் என்றும் ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.**

## 6) சிடபிள்யு 1/25357/ 09

மதுரை மாநகராட்சி **54–**வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.ஜே.டி.அமுதா, கடந்த 27.01.2009, 03.02.2009 மற்றும் 30.06.2009 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மாமன்றக்கூட்டங்களில் கலந்துக்கொள்ளவில்லை. மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 60ல் சொல்லப்பட்டுள்ளவைகளுக்குட்பட்டு மேற்படி சட்டப்பிரிவு 57(1) (கே.)-ன்படி ஒரு மாமன்ற உறுப்பினர் கடைசியாக கலந்துக் கொண்ட கூட்டத்திலிருந்தோ அல்லது பதவியேற்றதில் இருந்தோ தொடர்ந்து மூன்று மாதங்கள் கலந்துக் கொள்ளாமல் இருப்பாராயின் அவர் மாமன்ற உறுப்பினர் தகுதியை இழந்தவராக கருத்தப்பட வகை செய்யப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சி சட்டம் 1971ன்படி பிரிவு 57 (4)ல் கண்டுள்ளவாறு இவ்வாறு தொடர்ந்து மூன்று கூட்டங்களில் கலந்துக்கொள்ளாத நிலையில் மாமன்ற உறுப்பினர் தகுதியை இழப்பதை மாமன்றத்திற்கு தெரிவித்து மாமன்றத்தின் முடிவினைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 57(4) ஆணையாளர் அறிக்கை அளித்து மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதின்பேரில் மாமன்றம் அவ்வாறான ஒருவர் மீது மீண்டும் மாமன்ற உறுப்பினராக அமர்த்தி தீர்மானிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் .744**

**இந்த மாமன்றம் உறுப்பினர் உடல்நலம் சரியில்லாமல் இருப்பதாக தெரிவித்திருப்பதால் இம்மாமன்றம் Condone செய்து இவரை தகுதி இழப்பிலிருந்து விலக்களித்து, இவர் மாமன்ற உறுப்பினராக தொடர்ந்து நீடிக்க மாமன்றம் தீர்மானிக்கிறது.**

**ஒம்) ஜி. தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 16.07.2009**